DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO. 203/2017**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா. 5

Defence

Court

Name : ராமு (மருத்துவர்)
Father/ Husband Name : கருப்பையா
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of
**05.09.2023**
**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தற்போது இணை இயக்குனராக புதுக்கோட்டையில் பணிபுரிந்து வருகிறேன். நான் 28.04.2017-ம் தேதி அரசு மருத்துவமனை தேவகோட்டையில் தலைமை மருத்துவராக பணிபுரிந்தபோது இரசு 10.30 மணியளவில் 24 மணிநேர பணியிலிருந்த மருத்துவர் செந்தில்குமார் அ.சா.2 என்பவர் தொலைபேசி வாயிலாக என்னை அழைத்து அடையாளம் தெரியாத நபர் அன்று பணியிலிருந்த ஆண் செவிலியர் உதவியாளர் வீரையா என்பவரை தாக்கியதாக கூறியதன்பேரில் அப்போதே மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது பணி மருத்துவர் அடித்த நபர் யார் தெரியாது அவருடைய இரு சக்கர வாகனம் ஒன்று நிற்கிறது என்றும் மேற்படி இருசக்கரவாகனத்தில் இருந்த ஆவணங்களை வைத்து புகார் கடிதம் எழுதியிருப்பதாக என்னிடம் கூறினார். எனவே மேற்படி புகார் மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறைக்கு பணிந்துரை செய்தேன். (**புகார்**

**மனுவில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.8)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

**1.** எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். மருத்துவர் செந்தில்குமார் நடந்த சம்பவத்தை பற்றி கூறிய விபரத்தை புகாராக எழுதி எனது பரிந்துரை பெற்ற அன்றே தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்று சொன்னால் கொடுத்திருப்பார். எங்கள் மருத்துவமனையில் சி.சி.டி.வி.கேமரா பொருத்தப்பட்டு இருந்தது என்று சொன்னால் இருந்திருக்கலாம்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.R.M.**மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.